Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூ.50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 249

வியாழக்கிழமை
01 ஒகஸ்ட் 2024

ஆடி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"இன்னும் நிறையத் திருப்பங்கள் எல்லாம் உந்த எலக்சனுக்குள்ள நடக்கப்போகுது கண்டியளோ"

## கொழும்பு அரசியலில் திருப்பம்;

# ரணிலுக்கு சு.க.அணி ஆதரவு



கொழும்பு, ஒகஸ்ட் 1

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிப்படுத்தியுள்ள நிலையில், அவருக்கான ஆதரவு நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. இதன்படி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினர் நேற்று ரணிலுக்கான ஆதரவை வெளிப்படுத்தினார்கள்.**

15

### வித்தியா படுகொலை:

## மேன்முறையீடு மீதான விசாரணை ஜனவரி 20

கொழும்பு, ஓக. 1
புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஆறு பிரதிவாதிகளின் மேன்முறையீட்டு மனுவை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 20ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

15

### சட்டவிரோதமாக

## இலங்கையில் நாளாந்தம் 1,000 கருக்கலைப்புகள்!

கொழும்பு, ஓக. 1
இலங்கையில், நாளாந்தம் சுமார் ஆயிரம் சட்டவிரோதக் கருக்கலைப்புச் சம்பவங்கள் பதிவாகுவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் விசேட மருத்துவர் சமல் சஞ்ஜீவ தெரிவித்துள்ளார்.

12

### மருத்துவத்துறை மீதான அபகீர்த்தி

## இணக்க சபைக்கு வழக்கை மாற்றுக

*மருத்துவர் அர்ச்சுனா தரப்பினர் நீதிமன்றில் நேற்றுக் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஓக. 1
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் முன்னாள் பதில் மருத்துவ அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிரான வழக்கு விசாரணைகள் நேற்று இடம்

15

## எரிவாயு விலை மாற்றமில்லை!

கொழும்பு, ஓக. 1
ஓகஸ்ட் மாதத்தில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது எனவும், ஜூலை மாதம் நிலவும் விலையிலேயே ஓகஸ்ட் மாதமும் லிட்ரோ சமையல் எரிவாயு விற்பனை செய்யப்

15

### உடுப்பிட்டிப் படுகொலை;

## இறந்தவரின் மனைவியும் இன்னொருவரும் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 1
உடுப்பிட்டி, இமையாணன் வடக்குப் பகுதியில், சரமாரியான வெட்டுத் தாக்குதலால் படுகாயமடைந்த குடும்பத் தலைவரொருவர் அண்மையில் உயிரிழந்த

15

## பேருந்தில் வைத்து நகைகள் திருட்டு!

யாழ்ப்பாணம், ஓக. 1
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் பேருந்து ஒன்றுக்குள் வைத்து 11 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.
வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்களிடமே இவ்வாறு நகைகள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் யாழ்ப்

12

## யாழ். பல்கலைக்கழக ஊழியர் தவறான முடிவெடுத்துச் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 1
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் ஒருவர், தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட ஆய்வுகூட உதவியாளராகப் பணியாற்றி வந்த மேற்படி நபர், கடந்த 26ஆம் திகதி தவறான முடிவெடுத்து உயிரிழப்

15

### வவுனிக்குளத்திலிருந்து

## சடலமாக மீட்கப்பட்ட நபர் கழுத்து நெரித்துக் கொலை

யாழ்ப்பாணம், ஓக. 1
கனடாவுக்குச் செல்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்காக 20 இலட்சத்துடன் பயணித்த இளைஞர் வவுனிக்குளத்திலிருந்து நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்ட

15

## உருக்குலைந்த நிலையில் முதியவரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 1
புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியில், முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
வேலாயுதர் பாலசுப்பிரமணியம் (வயது-68) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

12

## இளைஞன் உயிர்மாய்ப்பு

கொடிகாமம், ஓக. 1
தவறான முடிவு எடுத்த 20 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் பாலாவி வடக்கு கொடிகாமத்தில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.
சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற

15

## ஹமாஸின் உயர்மட்டத் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலை!

### இஸ்ரேலுக்கு எதிரான நகர்வுக்காக சர்வதேசத்தை ஒருங்கிணைத்தவர்

### சுதந்திர பலஸ்தீனத்தை அங்கீகரிப்பதற்கு ஐ.நா.சபையில் செயற்பட்ட பெருந்தலைவர்

தெக்ரோன், ஓக. 1
ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவரும், பலஸ்தீனத்தின் முன்னாள் பிரதமருமான இஸ்மாயில் ஹனியே (வயது - 61), ஈரானின் தலைநகர் தெக்ரோனில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். 1963 ஆம் ஆண்டு

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சட்டவிதிமுறை சரிசமமாக நடத்துங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஐ.மக்கள் சக்தி கடிதம்

**கொழும்பு, ஓக. 1**

**தேர்தல் சட்டங்களை அனைவருக்கும் சரிசமமாக நடைமுறைப்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தி தேர்தல்கள் ஆணையாளரிடம் கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தி பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமுதாய நலத் திட்டங்களை நிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்தத் திட்டங்களுக்கும் தேர்தலுக்கும் எதுவித தொடர்புமில்லை. இந்தத் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்குக் கட்டுப்பணம் செலுத்திய பின்னர் தொழில மைச்சு ஏற்பாடு செய்திருந்த 'ஜெயமகு' ஸ்ரீலங்கா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தனக்கு ஆதரவு திரட்டுகிறார்.

அரச நிதியை துஷ்பிரயோகம் செய்கிறார். தேர்தல்கள் ஆணைக்குழு அனைத்து வேட்பாளர்களையும் சரிசமமாக நடத்தவேண்டும் - என்றுள்ளது. (ச-6)

# சரத் பொன்சேகா இந்தியா பயணம்



கொழும்பு, ஓக. 1

பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக போட்டியடவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில் சரத் பொன்சேகா இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

புதுடில்லியிலுள்ள இஸ்ரேலிய தூதுவர், சரத் பொன்சேகாவுக்கு வரவேற்பு உபசாரத்தை வழங்கியுள்ளார். (ஒ-6)

# கட்டுப்பணம் செலுத்தினார் சஜித்



கொழும்பு, ஓக. 1

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் கீழ் வேட்பாளராக களமிறங்குவதற்குரிய கட்டுப்பணத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ செலுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையிலான குழுவினர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேற்றுச் சென்று, கட்டுப்பணம் தாக்கல் செய்தனர்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெல்வது உறுதி எனக் குறிப்பிட்டார்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவும் இவ்வாரத்துக்குள் கட்டுப்பணம் செலுத்தவுள்ளார். (ஒ-44)

# மொட்டு வெல்லும்

கொழும்பு, ஓக.1

மொட்டுக் கட்சியின் இருப்பு என்பது மஹிந்த ராஜபக்சவிடம்தான் தங்கியுள்ளது. எனவே, எவர் கட்சியை விட்டு வெளியேறினாலும் கட்சி வீழ்ச்சியடையாது. ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் வெல்வோம்.

-இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்சவின் படத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றம் வந்தவர்களே கட்சி முடிவுக்கு எதிராகச் செயற்படுகின்றனர். அவர்கள் அவ்வாறு செயற்பட்டாலும் மக்களும், கட்சி ஆதரவாளர்களும் கட்சியுடன்தான் நிற்கின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் நாம்தான் வெல்வோம். புதிய வாக்குகளைப் பெறக்கூடிய வேட்பாளர் எமது வசமே உள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# மஹிந்தவுக்கு ரணில் நன்றி

கொழும்பு, ஓக.1

நாட்டைக் கட்டியெழுப்ப முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தன்னை நியமித்து எடுத்த சரியான தீர்மானத்துக்கு நன்றி தெரிவிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் இடம்பெற்ற கூட்டத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார். 2022ஆம் ஆண்டு நாடு அரசியல் மற்றும் பொருளாதார வீழ்ச்சியை சந்தித்த போது, நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை நான் மட்டும் ஏற்கவில்லை. திறமையான குழுவினரே என்னுடன் இணைந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# தமிழ்ப் பொதுவேட்பாளர் ஈ.பி.டி.பி. இணங்காது

### கட்சியின் பேச்சாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக.1**

தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயம் தேர்தல் களத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமே தவிர தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கானதல்ல. இதற்கு நாம் ஒரு போதும் இணங்கமாட்டோம்.

-இவ்வாறு ஈழ மக்கள் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரண்டு பிரிவினர் தங்களுக்குள் இணக்கமற்ற சூழல் நிலவுகின்றபோது பொது உடன்படிக்கை செய்துகொள்வது இயல்பானது. ஆனால் இங்கு ஏழு குழுக்கள் கட்சியாகவும், சிவில் சமூகத்தவர்கள் என்ற சிலரும் இவ்வாறு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு பெரிதாக ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டதாக புழகாங்கிதம் அடைந்துவருகின்றனர்.

அடுத்தவருட நடுப்பகுதிக்குப் பின்னர் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை இலக்குவைத்தே உதிரிகள் எல்லாவற்றையும் ஓரணியில் திரட்ட நாடகமாடுகின்றார்கள். எனவே இதற்கும் நாம் இணங்க மாட்டோம்- என்றார். (ச-20)

# நாட்டைச் சீரழித்தோரை தே.ம.ச. ஏற்காது

அநுராதபுரம், ஓக. 1

தன்னுடன் இணைந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்த எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை, தான் நிராகரித்து விட்டதாக அநுரகுமாரதிஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடு சீரழிவதற்குக் காரணமாயிருந்தவர்களை ஒருபோதும் தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ள மாட்டாது எனவும் அநுர மேலும் தெரிவித்துள்ளார். (ச-25,6)

# பதில் பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படவேண்டும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு, ஓக.1

பொலிஸ்மா அதிபர் அல்லது பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கத் தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஒன்றுகூடிய போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி மற்றும் நலன்புரி வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை எட்டும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அரசமைப்பு சபைக்கு பொலிஸ்மா அதிபர் ஒருவரின் பெயரை ஜனாதிபதி பிரேரிக்க வேண்டும். பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஊடாகவேனும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் இதன்போது பிரஸ்தாபிக்கப்பட்டது. (ச-இ)

# கொள்கைப் படியே வேட்பாளர் தெரிவு

## நாமல் தெரிவிப்பு

நாட்டின் ஒற்றையாட்சி, தேசியம் ஆகியவற்றை கருத்திற் கொண்டே அரசியல் தீர்மானத்தை எடுத்துள்ளோம். பொதுஜன பெரமுனவின் கொள்கையை பிரதிநிதித்துவப்படுத்தி தெரிவுசெய்யப்பட்டவர்கள் கொள்கைக்கு அமைய செயற்பட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கட்சியைப் பலப்படுத்துவதற்காகவே கட்சியின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கவேண்டும் என்று தீர்மானித்தோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு என்று குறிப்பிட்டுக் கொள்ளும் தரப்பினர்களில் பெரும்பாலானோர் உறுதியான தீர்மானத்தை எடுக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சி நிச்சயம் வெற்றிபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மலையகப் பாடசாலைகளுக்கு ரூ. 300 மில். இந்தியா உதவி

கொழும்பு, ஓக. 1
மலையகப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கென இந்திய அரசு 300 மில்லியன் ரூபாவை மேலதிகமாக வழங்கியுள்ளது.
2019ஆம் ஆண்டு மலையகப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கென இந்தியஅரசு 300 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து மூலப்பொருள்களின் விலை அதிகரித்தமையால் இந்தத் திட்டம் தடைப்பட்டிருந்தது.
இந்தத் திட்டத்தை பூரணப்படுத்துவதற்காக தற்போது இந்தியஅரசு 300 மில்லியன் ரூபாவை மேலதிகமாக வழங்கியுள்ளது. (ஒ-6)




# 1500/= தரலாம்!

## பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கம்

**கொழும்பு, ஓக.1**
**பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 1350 ரூபாவுடன் 1500 ரூபா நாளாந்த சம்பளத்தை வழங்க பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.**

அதற்கான கூட்டு உடன்படிக்கையை மீள கைச்சாத்திட பெருந்தோட்ட நிறுவனங்கள் இணங்கியுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் சக்திவேல் தெரிவித்துள்ளார்.
அத்துடன் 1700 ரூபா சம்பளத்துக்கான அழுத்தத்தை பிரயோகித்ததை அடுத்தே, 1500 ரூபா சம்பள அதிகரிப்புக்கான இணக்கப்பாட்டுக்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச)

## நாளொன்றுக்கு 145 பேர் டெங்கால் பாதிப்பு

கொழும்பு, ஓக.1
நாட்டில் நாளொன்றுக்கு சுமார் 145பேர் டெங்குநோயால் பாதிக்கப்படுகின்றனர் என்று சுகாதாரப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
ஜூலை 28ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் 4ஆயிரத்து 62 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 பேர் உயிரிழந்துள்ளனர். சீரற்ற காலநிலை தொடர்வதால் டெங்குநோய் பரவும் அபாயம் தீவிரமடைந்துள்ளது என்றும் சுகாதாரப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)



## பாடநூல்கள் அச்சிடல் நிறைவு

கொழும்பு , ஓக. 1
2025 ஆம் ஆண்டுக்குரிய பாடநூல்கள் அச்சிடும் பணி முடிவடைந்துள்ளதாகவும் தற்போது பாடநூல்களை அனுப்பும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
அடுத்த வருட ஜனவரி இரண்டாம் வாரத்தில் முதல் தவணை பாடசாலைகள் ஆரம்பமாகும் போது பாடநூல்கள் மாணவர்களின் கைகளில் கிடைக்குமெனவும் தெரிவித்துள்ளார். பாடநூல்கள் அச்சிடுவதற்கு 12 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-22,6)

## பந்துலவின் கடனட்டையில் மோசடி

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் கடனட்டையைப் பயன்படுத்தி பொருள்களைக் கொள்வனவு செய்த நபர்கள் குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு நீதிமன்றம், குற்ற விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## தபால் மூலம் போதைவஸ்து: பொலிஸார் கண்காணிப்பு

கொழும்பு , ஓக. 1
தபால் மூலம் அனுப்பப்படும் பொதிகளில் உள்ள போதைவஸ்துகளை கண்டறிவதற்கு கொழும்பு மத்திய பரிவர்த்தனை நிலையத்தில் விசேட பொலிஸ் பிரிவு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக அஞ்சல்மா அதிபர் சத்குமார தெரிவித்துள்ளார்.
அண்மைக்காலங்களில் தபால் பொதிகள் ஊடாக போதைவஸ்து கடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். (ச-22,6)



## புதினம் தெரியுமோ?

முந்தநாளையான் பட்சியில, வார்ட்டுக்குப் பொறுப்பான டாக்குத்தர் ஒருநாள் வர லேட் எண்டதால, வருத்தம் மாறினவர் துண்டுவெட்டி வீட்ட போக லேட்டான விசயம் சொல்லுப்பட்டதெல்லோ. இப்பிடி துண்டுவெட்ட வேண்டிய டாக்குத்தர் வர லேட்டாகிற விசயம் அரசாங்க ஆஸ்பத்திரியளில அத்தி பூத்தமாதிரி எப்பவாவது இருந்திட்டுத்தான் வரும். ஏனெண்டால் எவ்வளவு வேளைக்கு வருத்தம் மாறினவையை துண்டுவெட்டி வீட்ட விடுகினமோ, அந்தளவுக்கு கெதியா வருத்தக்காரருக்கு கட்டில் குடுக்கலாம். இல்லாட்டி அவை பாயைப் போட்டு நிலத்திலதான் இருக்கவேணும். அண்டைக்கு டாக்குத்தருக்கு ஏதோ அவசர வேலை இருந்ததால, ஆஸ்பத்திரிக்கு வர லேட்டாகி இருக்கலாமே தவிர, பிளான் பண்ணி அரசாங்க ஆஸ்பத்திரியில துண்டுவெட்டி வெளியில விடுற விசயத்தை லேட் ஆக்கிறேலை.

ஆனால் வருத்தம் மாறி, வீட்டை போகலாம் எண்டு டாக்குத்தர் சொன்னபிறகும் நாள் முழுக்க தூங்க வைச்ச பிறகுதான் பிரைவேட் ஆஸ்பத்திரியளில துண்டுவெட்டிப் போகவேண்டிக் கிடக்கு எண்டு சனங்கள் புலம்புதுகள். என்ன வருத்தம் எண்டு பிரைவேட் ஆஸ்பத்திரியளுக்குப் போனாலும், முதல்ல அவையின்ர மண்டையைக் கழுவி, வார்ட்டில நிண்டாத்தான் முழுசா மாத்த ஏலும் எண்டு நம்பவைக்கினம். ஆனால் பிரைவேட் ஆஸ்பத்திரியளில வார்ட்டுக்குப் போறதும், கிணத்தில கொண்டு போய் காசைக் கொட்டுறதும் ஒண்டுதான். வார்ட்டுக்குப் போனால் எல்லாத்துக்கும் ஒவ்வொரு காசு. நேர்ஸ் வந்து பார்த்தால் காசு, குளுக்கோஸ் ஏத்தினால் காசு, வார்ட் இருக்கிற ரூமைக் கூட்டினால் காசு, மருந்து கட்டினால் காசு, ஊசி போட்டால் காசு, அட்டெண்டர்மார் அறைக்குள்ள எட்டிப்பார்த்தாலும் காசு எண்டு அனுமார்வால் மாதிரி பில் நீளமாகிக் கொண்டே போகும். மகாபாரதத்தை வாசிச்சு முடிச்சாலும், இந்த பிரைவேட் ஆஸ்பத்திரியளின்ர பில்லை வாசிச்சு முடிக்கேலாது. ஏதோ ஒரு கைக்கணக்கில பார்த்திட்டு காசைக் கட்ட வேண்டியதுதான்.

இப்பிடி காசு செக்கனுக்கு செக்கன் கரைஞ்சு கொண்டே போறதால, காசைக் காப்பாத்தவேணுமே எண்ட பயத்திலேயே கனபேருக்கு வருத்தம் கெதியில மாறிடுமாம். அப்பிடி மாறினாப் போல லேசில வெளியில விடுறதுக்கு பிரைவேட் ஆஸ்பத்திரிக்காரர் அவ்வளவு அறிவில்லாதவையோ? 'எல்லாம் நோர்மலா இருக்கு. நீங்கள் இப்பவே ரிக்கெற் வெட்டிக்கொண்டு போகலாம்' எண்டு டாக்குத்தர் விடியவே சொல்லிப்போட்டு போனாலும், அவையை துண்டு வெட்டி விடுற பிளான் அவைக்கு இருக்காது. பிறகு ஆரும் சொந்தக்காரர் போய், 'டொக்டர் போகலாமெண்டிட்டார். எப்ப துண்டுவெட்டுவியள்? ரைம் சொன்னாத்தான் வாகனத்துக்குச் சொல்லலாம்' எண்டு கேட்டாலும் ஒண்டும் சொல்லாயினம். நாலைஞ்சு தரம் கேட்ட பிறகுதான் 'உங்கட பில் எல்லாம் எக்கவுண்ட்ஸ் பிரிவுக்கு அனுப்பி இருக்கு. அவை செக் பண்ணிப்போட்டு பில் வந்த பிறகு, காசைக் கட்டிட்டுப் போகலாம்' எண்டு முகத்தில ஒரு உணர்ச்சியையும் காட்டாமல் சொல்லுவினம். அப்பிடிச் சொல்லி ரண்டு, மூண்டு மணித்தியாலம் கழிஞ்சாலும் கணக்குப் பார்த்து பில் வராது. பிறகும் ஒரு நாலைஞ்சு தரம் போய் அரியண்டம் குடுத்தாத்தான் ஆடியசைஞ்சு, ஏழெட்டு மணித்தியாலத்துக்குப் பிறகு பில் வரும். அதைக் கொண்டுபோய், காசைக் கட்டி, பிறகு அதைக் கொண்டந்து வார்ட்டில காட்டி, துண்டுவெட்டிப் போக இருட்டிப் போடும். ஏனிப்பிடி லேட்டாக்குகினம்? எல்லாம் பிளானிங் தான். நேரம் போகப் போக பில்லும் கூடும், வருமானமும் கூடும். அதால எவ்வளவுக்கு லேட்டாக்க ஏலுமோ அவ்வளவுக்கு லேட்டாக்கி, கறக்க முடிஞ்சளவு கறக்கிறதில பிரைவேட் ஆஸ்பத்திரியளை வெல்ல ஆராலும் முடியாது.

-பட்சி
padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 1

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் ஏற்பாடு செய்த, பண்ணிசை, சங்கீதம், வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நடனம், வீணை, கதாப்பிரசங்கம், புராண படனம், பேச்சுத் திறன் ஆகிய இலவச கலை வகுப்புகள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இயங்கி வரும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அலுவலகத்திலும் மற்றும் யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பொருத்தமான இடங்களில் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாடநெறிகளுக்கான வளவாளர்களும் வேண்டப்படுகின்றனர். எனவே துறைசார் அனுபவம்மிக்கவர்கள் தங்கள் சுயவிவரக் கோவைகளை அலுவலக நாள்களில் அலுவலக நேரத்தில் ஒப்படைக்கமுடியும். அதே போன்று, கற்கைநெறி பயிலவுள்ளவர்கள் அலுவலக நேரத்தின்போது அலுவலகத்துக்கு வருகைதந்து பதிவுகளை மேற்கொள்ளமுடியும். விண்ணப்ப முடிவு ஓகஸ்ட் 31 ஆம் திகதி எனவும் மேலதிக தொடர்புகளுக்கு 077 004 4046 மற்றும் 077 582 1041 எனும் இலக்கங்களைத் தொடர்புகொள்ளுமாறும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ப)



## நுழைவாயிலுக்கு அடிக்கல் நடுகை

கிளிநொச்சி, ஓக.1

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நுழைவாயில் அமைப்பதற்கான அடிக்கல் நடுகை விழா, கல்லூரி அதிபர் ச.பூலோகராசா தலைமையில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் முன்னாள் ஓய்வுநிலை அதிபர் சோதிநாதன், பழைய மாணவர்களான மருத்துவர் சிறிதர், கணக்காளர் ரவிச்சந்திரன், பொறியியலாளர் கடம்பசீலன், ஆசிரிய ஆலோசகர் லோகேஸ்வரன் மற்றும் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-13)



சண்டிலிப்பாய் பிரதேச கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத் தொற்று நோயியல் மையம் மற்றும் குடும்பநலச் சுகாதார நிலையம் இணைந்து நடத்திய உள ஆரோக்கியம் கற்கை முறைமைகள் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு அண்மையில் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. (ச-66)



## மத வன்முறைகள் தடுப்பு: மன்னாரில் செயலமர்வு

மன்னார், ஓக. 1

மன்னாரில் தேசிய சமாதானப் பேரவையால் முன்னெடுக்கப்பட்டுவரும் மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு செயற்றிட்டத்தின் கீழ் பிரதேச சர்வ சமயக் குழுக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு மத ரீதியான வன்முறைகளைத் தடுப்பதற்கான தெளிவூட்டும் செயலமர்வு மன்னாரில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சமய சகவாழ்வு உட்பட மன்னார் மாவட்டத்தில் மத ரீதியாக காணப்படும் பிரச்சினை தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள், தேர்தல் காலங்களில் மேற்கொள்ளப்படும் மத ரீதியான வெறுப்பு பேச்சைக் கட்டுப்படுத்தவேண்டிய அவசியம் ஆகியவை தொடர்பில் இதன்போது கருத்துரைகள் வழங்கப்பட்டன.

செயலமர்வில் மதகுருமார்கள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22-56)

# மருத்துவர்கள் தங்குமிடத்தை ஆக்கிரமித்துள்ளார் அர்ச்சுனா

### நீதிமன்றத்தில் நேற்றுச் சுட்டிக்காட்டு

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் முன்னாள் பதில் மருத்துவ அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா, குறித்த மருத்துவமனையின் மருத்துவர்கள் தங்குமிடத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வைத்துள்ளார் என்று நீதிமன்றத்தின் கவனத்துக்கு நேற்று கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் பொறுப்பாளர் பொறுப்பிலிருந்து மாற்றப்பட்டு வேறு மருத்துவமனையில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள போதிலும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மருத்துவர்கள் தங்குமிடத்தை மருத்துவர் அர்ச்சுனா தொடர்ந்தும் தன் கட்டுப்பாட்டிலேயே வைத்துள்ளார். குறித்த தங்குமிடத்துக்கு வேறு மருத்துவர்களும் தமது பணத்தைச் செலுத்திவரும் நிலையில், மருத்துவர் அர்ச்சுனா விடுதியை ஒட்டுமொத்தமாகப் பூட்டி சாவியைத் தன்னுடன் எடுத்துச் செல்கின்றார் என்று வழக்குத் தொடுநர்களின் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினார்கள்.

இதற்கு, 'மேற்படி விடுதியில்தான், அர்ச்சுனா முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்கள் உள்ளன என்றும், இதனால்தான் அவர் அதைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார் எனவும் மருத்துவர் அர்ச்சுனாவின் சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார். (அ-26)

## குருதிக்கொடை

மன்னார், ஓக. 1

மன்னார் மறை மாவட்டத்தில் பல்வேறு மனிதநேயப் பணிகளை ஆற்றிவரும் கறிற்றாஸ்வாழ்வுதயம், வருடாந்தம் முன்னெடுத்துவரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு, மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரை இடம்பெறவுள்ளது. (ப-56)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். முருகப் பெருமானை வழிபடுவது நன்று.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். எதிரிகள் பணிந்து வருவார்கள். வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிள்ளைகளின் உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உற்சாகமான சூழ்நிலை ஏற்படும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். உறவுகளால் மகிழ்ச்சி உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**கன்னி:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவுசெய்ய நேரிடும். பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும்.

**துலாம்:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம். தேவையற்ற சில பிரச்சினைகள் ஏற்பட்டு சங்கடம் தரக்கூடும்.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். செலவுகள் ஏற்படும். கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. செலவு செய்யவேண்டி இருக்கும். வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப் பிடிப்பது நல்லது.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார். உறவினர்களால் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி திருவிழாவில் கடைப்பிடிக்க வேண்டியவை

யாழ்ப்பாணம், ஓக.1

வரலாற்றுப்பிரசித்திபெற்ற தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19ஆம் திகதியன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

மஹோற்சவத்தையொட்டிய ஏற்பாடுகள் தொடர்பிலும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பிலும் ஆராயும் கூட்டம் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது பின்வரும் விடயங்கள் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று ஆலய நிர்வாகத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1. மஹோற்சவ காலத்தில் ஆலயத்துக்கு வருகை தரும் எந்தவொரு வாகனமும் வீதித்தடைகளுக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது. சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார், முச்சக்கரவண்டி மற்றும் வேறு வாகனங்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு தரிப்பிடத்தில் நிறுத்தப்பட வேண்டும்.
2. ஆலய வளாகத்தில் வீதித்தடைகளுக்கு உள்ளே உள்ள அன்னதான மண்டபங்களுக்கும் மற்றும் ஆலய வளாகத்தில் வீதித்தடைகளுக்கு உள்ளே வசிக்கும் குடும்பங்களுக்கும் மற்றும் ஆலயத்துக்குத் தேவையான பொருள்களை வாகனத்தில் ஏற்றிச் செல்வதற்கும் பிரதேசசெயலகத்தால்வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி தமது தேவையின் நிமித்தம் பிரயாணங்களை மேற்கொள்ள முடியும்.
3. ஆலய வளாகத்தில் உள்ள விற்பனை நிலையங்களுக்கு பொருள்களை ஏற்றி இறக்கும் பணியை மேற்கொள்வதற்கு விசேடமாக வழங்கப்படவுள்ள அனுமதி அட்டையில் குறிக்கப்பட்ட நேரத்தில் வீதித்தடையில் கடமையில் உள்ள பொலிஸாரிடம் காண்பித்து அனுமதி பெற்று உள்நுழைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
4. நகர சபையில் அனுமதி பெறாத நடைபாதை வியாபாரிகளுக்கும், தற்காலிக கடைகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.
5. கடை உரிமையாளர்கள் நகரசபையின் உதவியுடன் ஒவ்வொரு நாளும் முறையாக கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.
6. பொருள்களின் நிர்ணயிக்கப்பட்ட விலையை மீறி அதிக விலைக்கு விற்பனை செய்வோர் மீது விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
7. தனியார் காணிகளில் அமைந்திருக்கும் நிரந்தர கடைகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதுடன் ஆலய வீதியிலும் ஆலயத்திற்குச் செல்லும் வீதிகளிலும் போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தும் வகையில் நடைபாதை வியாபார நடவடிக்கைகளுக்கும் தற்காலிக கடை அமைக்கப்படுவதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.
8. ஆலய பூசைகளின்போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றத் தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
9. உணவகநிலையங்களுக்கானகுடிநீர் பொதுச்சுகாதாரப் பரிசோதகரினால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் இருந்து பெறப்படவேண்டும்.
10. அடியவர்கள் ஆசாரசீலர்களாக ஆலயத்துக்கு வருகைதருமாறும், ஆலயத்தின் புனிதத் தன்மையை பேணுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-26)



John Keells Office Automation (Pvt) Ltd.
90, Union Place, Colombo 2
www.jkoa.com



சீன அரசாங்கத்தால் மீனவர்களுக்கு வாழ்வாதார உதவியாக வழங்கப்படும் மீன்பிடி வலைகள் நேற்றுப் புதன்கிழமை கிளிநொச்சி கொண்டுவரப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தில் 1060 மீனவர்களுக்கு குறித்த வலைகள் வழங்கப்படவுள்ளன. (ச-113)

# நலத்திட்டத்தில் பாகுபாடு பயனாளி போராட்டம்!



கொழும்பு, ஓக. 1

நவாலி வடக்கு ஜே/134 கிராமஅலுவலர் பிரிவில் கிராம அலுவலரின் உதவியாளராகச் செயற்படும் பெண்ணொருவர் உதவித் திட்டங்களில் பாகுபாடு காட்டுவதாக தெரிவித்து பயனாளி ஒருவர் கிராம அலுவலகத்துக்குமுன்பாகநேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் வாழ்வாதார உதவித்திட்டங்களில் பாகுபாடு காட்டப்படுவதாகவும் பொதுக் கூட்டங்களுக்கு சமூகமட்ட பொது அமைப்புகளுக்கு அறிவித்தல் வழங்குவதில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண் குற்றஞ்சாட்டியுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்ட பெண் தான் அனுப்பிய கடிதங்கள், தனக்குக் கிடைத்த கடிதங்களை ஆடையில் தொங்கவிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டார். (ச-27)



# ரவைகள், வாளுடன் மௌலவி கைது

கொழும்பு, ஓக.1

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் மௌலவி ஒருவர் ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் மற்றும் வாளுடன் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவற்றைவீட்டில்மறைத்து வைத்திருந்த நிலையில் அவை கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட மௌலவி மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பிலுள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச)

# ஒட்டுசுட்டான் பரிசங்குளத்தில் குடிதண்ணீர்த் திட்டம்!

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு சந்நிதி ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளால் கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பரிசங்குளத்தில் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பரிசங்குளத்தில் 16 குடும்பங்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலையினை எதிர்கொண்ட நிலையில் இக்கிராமத்தில் பாவனையற்று இருந்த பொதுக் கிணறு ஆழ்துளையிடும் கருவி மூலம் மேலும் ஆழமாக்கப்பட்டு நீர் விநியோக கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு தண்ணீர் தாங்கி மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. (ச-22,13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனகாம்பிகைக்குளம் அடாத்தாக பிடிப்பு கண்டித்து பொதுமக்கள் போராட்டம்

கிளிநொச்சி ஓக. 1

**கனகாம்பிகைக்குளத்தின் ஒரு பகுதி சட்ட விரோதமாக தனிநபர் ஒருவரால் மண் நிரப்பப்பட்டு அடாத்தாக பிடிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை கடந்த திங்கட்கிழமை முன்னெடுத்தனர்.**




ஏ-9 வீதியில் கனகாம்பிகைக்குளம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதியில் ஒன்றுகூடிய பொதுமக்கள் குளம் மண் நிரப்பப்பட்டு அடாத்தாகப் பிடிக்கப்பட்டதனை கண்டித்து ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

ஏ-9 வீதியோடு அண்டியதாக சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவு குளப்பகுதியை தனிநபர் ஒருவர் மண் நிரப்பி பிடித்துள்ள நிலையில், குளத்தின் பின்பகுதி முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 20 ஏக்கர் வரையான குளத்தின் பகுதிகளும் வேலியிட்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டே ஒன்று சேர்ந்த பொதுமக்கள் 'குளம் எங்களின் சொத்து', 'அனுமதிக்க மாட்டோம் அனுமதிக்கமாட்டோம் குளத்தை பிடிப்பதனை அனுமதிக்கமாட்டோம்', 'விவசாயிகளின வாழ்வாதாரத்தில் மண் அள்ளிப் போடாதே' எனப் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

சம்பவ இடத்துக்கு கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலர் சு.முரளிதரன், கரைச்சிப் பிரதேச செயலாளர் முகுந்தன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோர் சென்றிருந்தனர்.

அங்கு பொது மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் குளத்தை அடாத்தாகப் பிடிக்கப்பட்டவரின் ஆவணங்களை பரிசோதித்த போது அவரிடம் அதற்கான எவ்வித ஆதாரங்களும் இன்மையால் உடனடியாக இரண்டு நாட்களுக்குள் நிரப்பப்பட்ட மண்ணை அகற்றி குளத்தை வழமைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பதில் மாவட்டச் செயலர் சு.முரளிதரன், பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு பணிப்புரை வழங்கினார். (ஒ - 113,214)



## மாவைக் கந்தனின் கார்த்திகைப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 1

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த திருக்கார்த்திகைப் பெருவிழா கடந்த திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

நூற்றுக்கணக்கான அடியவர்கள் புடைசூழ மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய பூஞ்சப்பரத்தில் கந்தப் பெருமான் வெளிவீதி உலா வரும் திருக்காட்சி இடம்பெற்றது. (ஒ -25,66)



யாழ். பொது நூலக ஊழியர்கள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக நாடகத் துறையினர் இணைந்து, அரங்க ஆற்றுகை மற்றும் நடமாடும் நூலக சேவையை ஊரெழு கணேச வித்தியாசாலையில் நேற்றுப் புதன்கிழமை நடத்தினர். (ப)

## மத்தியஸ்தசபை அமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 1

எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த கரவெட்டி மத்தியஸ்தசபை அமர்வு ஆடி அமாவாசை காரணமாக அன்றையதினம் நடைபெறாது. அதற்குப் பதிலாக 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவழமை போல் இயங்கும் என தவிசாளர் சி.நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-25)

## அனுமதிக்கு முரணாக மணலகழ்ந்தோர் கைது



கிளிநொச்சி, ஓக. 1


தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் பகுதியில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் மணலகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 4 பேர் உழவியந்திரங்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் தடயப் பொருள்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-113)

## சாதனையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 1

தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத்தின் கல்விச் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு, வரணி தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தில் (சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய முன்றலில்) தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் கா.குணசிங்கம் தலைமையில் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது. கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் கற்ற, 1990 ஆம் ஆண்டின் க.பொ.த. சாதாரண தர மாணவர் அணியின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ப-159)



## சீருடை வழங்கல்!

கிளிநொச்சி, ஓக. 1

யாழ். தொண்டைமானாறு ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ்சுவாமிகளினால் கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் முத்தையன் கட்டு ஜீவநகர் முத்துமாரி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்கள் 52 பேருக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை இவ்வாலயத்துக்கு மலசலகூடம் ஒன்றும் அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் வன்னிமேம்பாட்டுப் பேரவை தயாபரன், யூட்சன், சஞ்சை, ரூபன், புஸ்ராசா போன்றவர்களும் கலந்து கொண்டார்கள். (ச - 22,13)

## 'எமது காலம்' கருப்பொருளில் பயணிக்கும் அருங்காட்சியகம்

மன்னார், ஓக. 1

வரலாற்று நிகழ்வுகளை இலகுவாக அறிந்து கொள்ளும் வகையில் 'எமது காலம்' எனும் கருப்பொருளில் 'பயணிக்கும் வரலாற்று' அருங்காட்சியகம் மன்னாரில்முன்னெடுக்கப்படவுள்ளதோடு, எதிர்காலத் தலைமுறையினர் தெரிந்து கொள்வதற்கு ஆவணப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதுகுறித்த நடவடிக்கை கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் பழைய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம் மன்னார் நகரில் 8 நாட்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை காலமும் வரலாற்று ரீதியான பதிவுகள் அறியப்படாத நிலையில் குறித்த நிகழ்வின் ஊடாக மக்கள் பயன் பெறும் விதத்தில் பயணிக்கும் அருங்காட்சியகம் முன்னெடுக்கும் படி மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

வளவாளர்கள் தமிழில் தமது கருத்துகளை ஆவணப்படுத்தல்களை முன் வைக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டது. (ஒ-56,60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## ஒரு கொலையும் கருக்கொள்ளும் போர்மேகமும்

நேற்றுப் புதன்கிழமை அதிகாலை. ஈரானில், உலகையே பதற வைத்த சம்பவம் நடந்து முடிந்திருக்கிறது. ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவுத்தலைவரான இஸ்மாயில் ஹனியே ஈரானில் உள்ள வீடொன்றில் வைத்து துல்லியமான ஏவுகணைத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்டுள்ளார். இந்தத் தாக்குதலை இஸ்ரேலின் உளவுப்பிரிவான மொசாட்டே நிகழ்த்தியிருப்பதாக பரவலாகச் சந்தேகிக்கப்படுகின்றது. ஏனெனில் இப்படியான துணிகரமான, துல்லியத் தாக்குதல்களே மொசாட்டின் அடையாளமாக இருந்திருக்கின்றன. இஸ்மாயில் ஹனியேவின் கொலையால், ஹமாஸுடனான பகையை மட்டுமல்லாமல் ஈரானின் பகையையும் இன்னும் கொழுந்துவிட்டெரியச் செய்யும் காரியத்தையே இஸ்ரேல் செய்திருக்கிறது.

உலகிலேயே எங்கும் சென்று, எதையும் செய்யும் ஆற்றலுள்ள அதிசக்திவாய்ந்த உளவுப்பிரிவாக அறியப்பட்டதே இஸ்ரேலின் 'மொசாட்'. ஆனால் இப்படி உலகையே ஆட்டுவிக்கும் சக்திகொண்ட மொசாட்டின் மூக்கை உடைத்தவர்கள் தான் ஹமாஸ் போராளிகள். 2023 ஒக்ரோபர் 7 ஆம் திகதி மொசாட்டின் கோட்டையான இஸ்ரேலுக்குள்ளேயே கிளைடர் விமானங்கள் மூலம் ஹமாஸ் சொல்லியடித்ததில், பெரும் இழப்பை இஸ்ரேல் சந்தித்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைக் கொன்றதுடன், நூற்றுக்கணக்கான இஸ்ரேலியர்களை ஹமாஸ் சிறைபிடிக்கவும் செய்தது. மொசாட் அமைப்பின் பெரும் புள்ளிகளும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டதுதான் மொசாட்டுக்கு ஏற்பட்ட உச்சபட்ச தலைகுனிவு. பகிரங்கமாக இப்படி மொசாட்டின் முகத்தில் ஹமாஸ் காறி உமிழ்ந்ததை அவர்கள் சாதாரணமாக எடுத்துக்கொள்ளவில்லை. இஸ்ரேல் பேயாட்டம் ஆடத் தொடங்கியது. ஹமாஸ் அமைப்பையே பூண்டோடு அழிக்க ஈவிரக்கமற்ற போர் கட்டவிழ்த்து விடப்பட்டு, காஸா நகரமே சுடுகாடு ஆக்கப்பட்டு விட்டது. 30 ஆயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீன மக்களின் குருதியைக் குடித்த பின்னும், மொசாட்டினால் தனக்கு நேர்ந்த அவமானத்தை மறக்க முடியவில்லை. அதனால், தன் பழிதீர்க்கும் படலத்தை காஸாவை விட்டு வெளிநாடுகளிலும் இப்போது மொசாட் விஸ்தரிக்க நினைத்தது. அந்தப் பழிதீர்க்கும் படலத்தின் முதல் பலியே, ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே.

பலஸ்தீனத்தின் பிரதமராக இருந்ததோடு, ஹமாஸ் அமைப்பின் சார்பில் சர்வதேச ரீதியான முன்னெடுப்புகளுக்கு இஸ்மாயில் ஹனியே பொறுப்பாக இருந்தார். கட்டார்-டோகாவில் இருந்து தன்னுடைய அரசியல் செயற்பாடுகளை அவர் தீவிரமாக முன்னெடுத்தார். அவரின் முயற்சியால் தான் பலஸ்தீனத்தை சுதந்திர நாடாக பல்வேறு நாடுகள் அங்கீகரித்துமிருந்தன. எனவே ஹமாஸின் முகமாக, அடையாளமாக விளங்கிய இஸ்மாயில் ஹனியை மொசாட் குறிவைத்தது. ஆனால் அவரை கட்டாரில் கொல்வது அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை. எனவேதான் ஈரானில் அவரைக் கொல்வதென முடிவெடுக்கப்பட்டது. இதன்மூலம் தன்னுடைய ஜென்மப்பகையாளியான ஈரானையும், நிரந்தர வைரியான ஹமாஸையும் ஒரேயடியாக பழிதீர்க்கலாமென மொசாட் எண்ணியது. அதற்கான தருணமும் வாய்த்தது அல்லது மொசாட்டால் உருவாக்கப்பட்டது. ஈரானின் அதிபராக இருந்த இப்ராஹிம் ரைசி ஹெலி விபத்தில் கொல்லப்பட்டதையடுத்து நடந்த தேர்தலில் புதிய ஜனாதிபதியாக தெரிவானார் மசூத் பெசஷ்கியான். அவரது பதவியேற்பு விழா நேற்று முன்தினம் ஈரானில் நடைபெற்றது. இந்தப் பதவியேற்பில் கலந்துகொள்வதற்காகத்தான் கட்டாரை விட்டுப் புறப்பட்டார் ஹமாஸ் இயக்க அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே. கட்டாரில் இருந்து எப்போது அவர் அகன்றாரோ அத்தோடு அவரின் பாதுகாப்பும் பலவீனமானது. அவருக்குத் தெரியாமலேயே மொசாட் நிழலாக இஸ்மாயில் ஹனியை தொடர்ந்தது. ஈரானிய உளவுப்பிரிவின் கவனம் முழுதும் புதிய ஜனாதிபதியின் பதவியேற்பில் இருந்தமை மொசாட்டுக்கு வாய்ப்பாகிப் போனது.

ஈரானின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் பூரண நம்பிக்கை கொண்டதால், இஸ்மாயில் ஹனியே தனது தனிப்பட்ட பாதுகாப்புக் குறித்து அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை, இதுவும் மொசாட்டுக்குச் சாதகமானது. துல்லியமான ஏவுகணை மூலம் இஸ்மாயில் ஹனியேவின் கதையைக் கண்ணிமைக்கும் நேரத்தில் முடித்துவிட்டது மொசாட். இது ஹமாஸுக்கு மட்டுமல்ல, ஈரானுக்கும் பெரிய அடி. ஈரானின் புதிய அதிபர் பதவியேற்ற சிலமணி நேரங்களிலேயே ஹமாஸின் முதுகெலும்பை ஈரானில் வைத்து, இஸ்மாயில் ஹனியேயின் உயிர்ப்பலியோடு உடைத்திருக்கிறது மொசாட். இந்தப் பலியெடுக்கும் படலத்தில் இப்போதைக்கு மொசாட் வென்றிருந்தாலும், ஏககாலத்தில் ஹமாஸினினதும், ஈரானினதும் வெறியை அதியுச்சமாக தூண்டியிருக்கிறது. இதனால் இனிமேல் இஸ்ரேலுக்குள் இந்தப் படுகொலைக்கான விலையை இஸ்ரேல் கொடுக்க நேரிடலாம். 'இஸ்மாயில் ஹனியேவின் குருதி வீணாகிப் போகாது' என்று ஈரான் சூளுரைத்திருப்பதன் மூலம், இஸ்ரேலைச் சுற்றி போர் மேகங்கள் மிக அடர்த்தியாக கருக்கொண்டு விட்டதையே கட்டியம் கூறுகின்றது.




## இலக்கு நோக்கி நாடு நகர்கிறது



### நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, ஓக. 1

**கடந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களுடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் வரவு - செலவுத் திட்ட பற்றாக்குறை 63 வீதம் குறைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

2023ஆம் ஆண்டு ஆயிரத்து 14 பில்லியன் ரூபா வரவு செலவுத் திட்ட இடைவெளி இந்த வருடத்தின் அதே காலப் பகுதியில் 66 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

முறையான பொருளாதார வேலைத்திட்டத்தின் ஊடாக நாடு முன்னோக்கி நகர்ந்ததன் விளைவாகவே இந்த நிலையை அடைய முடிந்ததாகவும் அவர் வலியுறுத்தினார். (ச-இ)

## கரணவாயில் 'யுக்திய' 12 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக.1

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' நடவடிக்கையில் 12 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 10 பேரும், கசிப்பை உடைமையில் வைத்திருந்த இருவருமாக 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார்மேற்கொண்டுள்ளனர். (ச-100)

## இடமாற்றங்கள் தாக்கமில்லை!

கொழும்பு, ஓக. 1

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பானது அரச உத்தியோகத்தர்களின் வருடாந்த (2025) இடமாற்றத்தில் தாக்கம் செலுத்தமாட்டாது என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. இணைந்த சேவை அரச உத்தியோகத்தர்களின் வருடாந்த(2025) இடமாற்றம் தொடர்பான சுற்றறிக்கை சகல திணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-6)

## வெள்ளை ஈ தாக்கம் 1916 க்கு அழைக்குக

கொழும்பு, ஓக.1

தென்னைப் பயிர்ச்செய்கை தொடர்பான வெள்ளை ஈ நோய் உள்ளிட்ட ஏதேனும் பிரச்சினைகள் குறித்துத் தெரிவிக்க அவசர எண் 1916 என்ற இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தென்னைப் பயிர்ச்செய்கைச்சபை தெரிவித்துள்ளது. இந்தத் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தெரிவிக்கப்படும் எந்தவொரு பிரச்சினைக்கும் உடனடியாகப் பதிலளிக்கப்படும் என்றும் தென்னைச் செய்கை சபையின் தலைவர் பண்டுக வீரசிங்க குறிப்பிட்டுள்ளார். (ச)

## நால்வருக்கு மரணதண்டனை

கொழும்பு, ஓக.1

சிங்கள புத்தாண்டு தினத்தன்று ஒருகொடவத்தை பகுதியில் நபர் ஒருவரை தடி மற்றும் கற்களால் தாக்கி கொலை செய்த குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து நான்கு பிரதிவாதிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் மரண தண்டனை விதித்துள்ளது.

ஒன்பது வருடங்களுக்கு முன்னர் ஒருகொடவத்தை சாந்தவத்த பிரதேசத்தில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச-இ)

### நாளை

02.08.2024

வெள்ளிக்கிழமை - ஆடி - 17

சுபநேரம் : 06.03 - 07.33

ராகுகாலம் : 10.33 - 12.03

### நாளொரு நல்வார்த்தை

**சிந்திக்காமல் படிப்பது வீண், படிக்காமல் சிந்திப்பது ஆபத்தானது.**

-கன்பூசியஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கலாநிதி விக்ரமபாகு கருணாரட்னவுக்கு வவுனியாவில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. பொது அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த குறித்த நிகழ்வில் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்னவின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். (ச-22,110)

ஆனைக்கோட்டை பொதுச் சுகாதாரப் பிரிவின் சுகாதாரம் சம்பந்தமான உள்ளகக் கலந்துரையாடல் ஜே\134 நவாலி வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. கலந்துரையாடலில் கிராம மட்ட உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

(ச-25, 66)





# தொழிற் சந்தை!

யாழ்ப்பாணம், ஓக. 1

பருத்தித்துறை பிரதேச செயலாளரின் ஒத்துழைப்புடன் உள்ளூர் முற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான தொழிற் சந்தை பருத்தித்துறை பிரதேசசெயலக வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் உற்பத்திப் பொருள்களை பார்வையிட்டு வாங்கிச் சென்றனர். (ச-22-100)

'இணைந்த கரங்கள்' அமைப்பால் கிளிநொச்சியிலுள்ள விழிப்புலனற்றவர்கள் 30 பேருக்கு உலருணவுப் பொருள்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ச-113)






# சாதனையாளர் கௌரவிப்பு

கொழும்பு, ஓக. 1

சர்வதேச ரீதியில் இலங்கை, இந்தியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கிடையே நடத்தப்பட்ட முதியவர்க ளுக்கான விளையாட்டுப் போட்டியில் 800 மீற்றர் தடைதாண்டலில் முதலாமிடத்தையும் 3000 மீற்றர் ஓட்டப் போட்டியில் 3ஆம் இடத்தையும் பெற்று தங்கம், வெண்கலப் பதக்கங்களை தனதாக்கி தாய்மண்ணுக்குப் பெருமை சேர்த்த 75 வயதுடைய தம்பிராசா வேலாயுதம்பிள்ளை பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பாராட்டு நிகழ்வு கொழும்பு இந்து மத்திய மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் பத்மரஞ்சன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ச)




கிளிநொச்சி மாவட்ட தொழிற்றுறை மன்றத்தின் முன்னேற்றம் மற்றும் வியாபார நிலையத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் எஸ். முரளிதரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

(ச-25-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 24, இராசாவின் தோட்டம் வீதி, 48B என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் M.P.ஜோசப் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், இல - 32, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை பெண் நீற்றம்மா 17.10.2004ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி. சி.ஜெயசித்திரா முகதாவில் 60ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம், சுண்டிக்குளி இறையில் உள்ள "பூந்தோட்டம்" என்ற பெயர் கொண்ட நிலப்பரப்பு முக்கால்(3/4) விஸ்தீரணம் கொண்ட ஆதனம் தன்னால் 30 வருடங்களுக்கு மேலாக எதுவித இடையீடும், குழப்பமும் இன்றி எவருக்கேனும் வாடகையோ, பயன்களோ செலுத்தாமலும், எவரது உரித்தையும் அங்கீகரிக்காது எதிர் உரித்தாகவும் ஆண்டு அனுபவித்து வருவதால் ஆட்சி உரிமைப்படி தனக்குச் சொந்தமானது என்று வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை, செபஸ்ரியாம்பிள்ளை பெண் நீற்றம்மா உரித்து மாற்றம் செய்யாது மரணிக்க அவரது பிள்ளைகளான வேப்பங்குளம், அடம்பன், மன்னார் எனும் முகவரியைச் சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை சிந்தாத்துரைராசா, செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் ராஜபாத், செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் பேர்ச்சஸ், அருமைலிங்கம் அனுரா மற்றும் அனுரா பெண் மேரி அமலவேணி ஆகியோர் 12.04.2024ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.சி.ஜெயசித்திரா முகதாவில் 5515ம் இலக்க அறுதி உறுதி மூலம் வேலார்த்தன் செல்லத்துரைக்கு வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சுண்டிக்குளி இறை, இது யாழ்ப்பாணம் பிரதேச செயலகப்பகுதியில், யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஜே/74 கிராம சேவகர் பிரிவில் உள்ள "பூந்தோட்டம்" நிலப்பரப்பு முக்கால்(3/4). இதற்கு எல்லைகள்-

கிழக்கு :- யோகராசா பெண் வசந்தாவின் ஆதனம்.
வடக்கு :- அந்தோனிப்பிள்ளை ஜீவரட்ணத்தின் ஆதனம்.
மேற்கு :- றோட்டு.
தெற்கு :- சண்முகத்தின் ஆதனம், இதடங்கலும்.


தற்போது வேலார்த்தன் செல்லத்துரை இவ்வாதனத்தை தனது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது வேலார்த்தன் செல்லத்துரை என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆணையாளர்,
யாழ் மாநகர சபை.

(CR/43007) J-1

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26 • 07 • 1929



மறைவு
13 • 08 • 2023

அமரர்
**சுப்பிரமணியம் கனகசபாபதி**
(ஓய்வுபெற்ற அதியர், சமாதான நீதவான்)

பூரணமானது ஓராண்டு
இப்புனிதன் காலத்துடன் கரைந்து
கண்கள் மீண்டும் மீண்டும்
உனைத்தானே தேடுது
என்ன பேறு செய்தோம்
நான்கு தலைமுறை கண்ட
நாயகன் எம் உறவாக - நீதானே
எம் கண்கண்ட தெய்வம்
நித்தியமாய் நிம்மதியாய்
குலசாமி பூதராயன் காலடியில்
கனகசபாபதி சரணாகதி

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

குடும்பத்தினர்

## நீங்கா நினைவுடன் ஐந்தாண்டு நினைவு நாள்

(ஜுலை - 28)

தோற்றம்
06.11.1967



மறைவு
28.07.2019

அமரர்
**சுகந்தி சதாசிவம்**



தோற்றம்
13.07.1988



மறைவு
18.08.2019

அமரர்
**சத்தியா செல்வரஞ்சன்**

தோற்றம்
24.01.1990



மறைவு
28.07.2019

அமரர்
**கோபிகா அஜந்தன்**


அமரர்
**மனோன்மணி கார்த்திகேசு**

தோற்றம்
14.04.1943

மறைவு
08.08.2019

ஆண்டு மட்டுமே ஐந்தாகக் கடந்தாலும்
அணையா விளக்கோடு நீங்கள்
அன்று விட்டுச் சென்ற
அதே இடத்திலேயே நாங்கள்......

தோற்றம்
18.08.2007



மறைவு
28.07.2019

அமரர்
**சிமிநாத் செல்வரஞ்சன்**

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிப்பர் - மோ.சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

பளை, ஓக. 1

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்தாவிலில் டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி இருவர் காயமடைந்துள்ளனர்.

ஏ - 9 வீதியில் யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த தாயும் மகளும் இத்தாவிலில் பாடசாலைக்கு திரும்ப முற்பட்ட வேளை எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதி படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் அங்கிருந்த இளைஞர்களால் பளை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

(ஓ-113-9- 27)

# எரிபொருள் விலைகளில் எவ்வித மாற்றமுமில்லை

கொழும்பு, ஓக. 1

ஓகஸ்ட் மாதம் எரிபொருள் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படமாட்டாதெனவும், தற்போது நிலவும் எரிபொருள் விலைகள் மாற்றமின்றிப் பேணப்படுமெனவும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று இரவு அறிவித்துள்ளது.

எரிபொருள் விலைகள் சடுதியாகக் குறைவடையவுள்ளதாக நேற்று மாலை சமூக வலைத்தளங்களில் பரவலாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையிலேயே, இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-66)


கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். வ/து

## காணி விற்பனை

சங்கத்திற்கு சொந்தமானதும் காரைக்கால் சிவன் கோவில் வீதி இந்து மயானத்தின் கிழக்கு பக்க எல்லையில் அமைந்துள்ளதுமான நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை பெரிய பனந்தோட்டம் என்னும் பெயர் கொண்ட சங்கக் காணி நிலப்பரப்பு 6 குளி 6.79 விஸ்தீரணம் கொண்ட தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் சங்கத்தால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பபடிவத்தினை (1000/= மீளளிக்கப்படாத கட்டுப்பணம் செலுத்தி பூர்த்தி செய்து முடிவு திகதிக்கு முன்னதாக தலைவர், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தாவடிச் சந்தி கோண்டாவில் என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் காணி விற்பனை விண்ணப்பம் என குறிப்பிட்டு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். (முழு விபரம் விண்ணப்பத்தில் உள்ளது.)

முடிவுத்திகதி :- 14.08.2024
நேரம் :- 12.00 மணி

கூட்டுறவுச்சேவையிலுள்ள,
பொதுமுகாமையாளர்.

(cr.43008) (N-1)






## யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள பிரதான சிற்றுண்டிச்சாலை மற்றும் பல்பொருள் விற்பனை அங்காடியினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்.

**01.09.2024 தொடக்கம் 31.08.2025 வரை**

யாழ் போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடத்துநர்களிடமிருந்தும் மற்றும் பல்பொருள் விற்பனை நிலைய நடாத்துநர்களிடமிருந்தும் 01.09.2024 தொடக்கம் 31.08.2025 வரையான காலப்பகுதிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை மற்றும் பல்பொருள் விற்பனை நிலையத்தினை நடத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

1. வைத்தியசாலை பகுதியில் உள்ள பின்வரும் விற்பனை நிலையங்கள் ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது.
   1. வைத்தியசாலையில் அமைந்துள்ள பிரதான சிற்றூண்டிச்சாலை.
   2. பல்பொருள் விற்பனை நிலையம் (Food City).
2. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் 'கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 01.08.2024 தொடக்கம் 16.08.2024 வரையான காலப் பகுதியில் (மு.ப) 09.00 மணி தொடக்கம் (பி.ப) 03.00 மணிவரை (பி.ப 12.30 தொடக்கம் பி.ப 01.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 07.08.2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
4. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபா 50,000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களை பெற வரும்போது உணவகத்திற்குரிய வியாபார பெயார்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும், குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும், மற்றும் சுகாதாரப் பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. விலைக் கேள்விகள் 16.08.2024 திகதி (பி.ப) 03.00 மணிக்கு முன்பதாக இப் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத்திறக்கப்படும்.
7. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது வைத்திய சாலையிலிருந்து 10 கி.மீ க்குள் உட்பட்டிருப்பதுடன் உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.
8. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க் காட்டப்பட்ட முகவரியில்/ தொலைபேசி இலக்கத்துடன் 021-222 2261 (Exchange No 204/205) தொடர்பை ஏற்படுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
9. கிடைக்கப் பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
10. மேற்படி வைத்தியசாலையின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்திய சாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப் பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்த காலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

தலைவர்/ பிராந்திய பெறுகைக்குழு.
போதனா வைத்தியசாலை.
யாழ்ப்பாணம்.

(CR/43011) J-1



## பெயர் மாற்றம்

புவனேஸ்வரி அம்மன் வீதி, அரியாலை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **சற்குணராஜா பத்மநாதன்** ஆகிய நான் எனது பெயரை **சற்குணராஜா பத்மாவதி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சற்குணராஜா பத்மாவதி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக குடியரசுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

சற்குணராஜா பத்மாவதி

(cs.55735 B) N-1)



## காணியும் வீடும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள நிலப்பரப்பு ( 2 3/4 ) இரண்டே முக்கால் விஸ்தீரணமுடைய காணியும் அதிலுள்ள (2) இரண்டு வீடுகளும் விற்பனைக்கு உண்டு.

விலை - ஏழுகோடி ரூபா

விலை பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்பு:- 077 430 6616
077 678 2174



## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

01. வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை.மானிப்பாயில் பாவனையிலிருந்து பதிவு நீக்கம் செய்யப்பட்டபின்வரும் வாகனங்களை விற்பனை செய்வதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல | வகை/உற்பத்தி | கேள்விப் பிணைப் படிவம் | |
|---|---|---|---|---|
| | | | தொகை (ரூபா) | காலாவதிதிகதி |
| 1 | NP/14/41/16(3)/Vehicle Con/2024 -(I) | பக்கோ (JCB) | 5,000.00 | 11.09.2024 |
| 2 | NP/14/41/16(3)/Vehicle Con/2024 -(ii) | டபிள்கப் (Mitsusishi) | 5,000.00 | 11.09.2024 |

02. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஒவ்வொரு கேள்வி ஆவணங்களையும் எழுத்து மூலமான கோரிக்கையுடன் ரூபா 2,000.00 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்தி அலுவலக நாட்களில் 01.08.2024ம் திகதி தொடக்கம் 14.08.2024ம் திகதிவரை மு.ப 9.30 மணிதொடக்கம் பி.ப 15.30 மணி வரையான காலப்பகுதியில் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை. மானிப்பாய் எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்விதாரர்கள் இவ் வாகனங்களை அலுவலக நாட்களில் 01.08.2024 ம் திகதி தொடக்கம் 14.08.2024ம் திகதி வரை மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 15.30 மணி வரை பிரத்தியேக வாகனத்தரிப்பிடம். வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை.மானிப்பாயில் பார்வையிடலாம்.

04. ஒரு கேள்விதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட வாகனங்களுக்கும் விலைக்கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால். ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியான விலைக் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. கேள்வி பிணை வைப்புப்பணமானது மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது வர்த்தக வங்கியிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டதற்கு அமைய கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படவேண்டும். அல்லது வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை தலைமை அலுவலகம் மானிப்பாயில் பணமாக செலுத்தப்பட வேண்டும்.

06. **கேள்வி ஆவணங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கேள்விப் பத்திர மூலம் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பம் என குறிப்பிட்டு 15.08.2024ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு "தலைவர் உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை. மானிப்பாய் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.** அல்லது **வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை. மானிப்பாயிலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாக இடப்படல் வேண்டும்'. கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் கேள்வி நேர முடிவில் திறக்கப்படும்.** இதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

07. கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது ஒப்பந்த அளிப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் எந்நேரத்திலும் கேள்விதாரர்களின் பொருட்டு எதுவித பொறுப்புக்களையும் ஏற்காது கேள்வி முறைமையை முடிவுறுத்தி சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு பெறுகைக் குழுவிவுக்கு அதிகாரம் உள்ளது.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

(cr43017) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருக்குலைந்த...

முன்னாள் அதிபரான அவர் தனிமையில் வசித்து வந்துள்ளார். அவருடைய வீட்டுக்குச் சென்றவர்கள் துர்நாற்றம் வீசுவதை அவதானித்து, அது தொடர்பில் பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய வீட்டைச் சோதனையிட்டபோது, உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

(அ-ம-26)

## இலங்கையில்...

இனப் பெருக்க ஆரோக்கியம் மற்றும் பாலியல் கல்வி தொடர்பான தெளிவின்மையே சட்டவிரோதக் கருக்கலைப்பு அதிகரிப்புக்குக் காரணமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் ஊடாகவே குறித்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது. (அ-ம-66)

## பேருந்தில்...

பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

(அ-ம-26)

## ஓகஸ்ட் இறுதியில் பல்கலை வெட்டுப்புள்ளி

கொழும்பு, ஓக. 1

87 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்துள்ளதாகவும், ஓகஸ்ட் மாத இறுதிக்குள் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளை வெளியிடத் திட்டமிட்டுள்ளதாகவும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(அ-ம-66)


## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்துரை செல்வரத்தினம்

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி தி.துஷியந்தினி அவர்களின் அன்புத் தந்தை சின்னத்துரை செல்வரத்தினம் அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிச் சங்கம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

### முருகையா சிவனேசன்

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி ஆரூரன் அனோஜா அவர்களின் அன்புத் தந்தை முருகையா சிவனேசன் அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிச் சங்கம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

### பொதுமக்களுக்கான பொது அறிவித்தல்

ஏழாலை உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு புதிய மீள் மதிப்பீட்டு ஆதனவரி 01.01.2025 ஆம் திகதி தொடக்கம் அறவிட உள்ளதால் 15.08.2024 ஆம் திகதி தொடக்கம் ஆதனவரி அறிவித்தல் படிவம் (K படிவம்) விநியோகிக் கப்படவுள்ளது. எனவே இவ் ஆதன மீள் மதிப்பீடு தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் ஒரு மாத காலப்பகுதிக்குள் எழுத்து மூலமாக அறியத் தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்,
வலி தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

4 x 8 N-1

## University of Jaffna, Sri Lanka

### Faculty of Graduate Studies

**Admission for Postgraduate Research Programme**

**Master of Philosophy (MPhil) & Doctor of Philosophy (PhD) – 2024**

The Faculty of Graduate Studies, University of Jaffna invites applications from eligible candidates for Master of Philosophy (MPhil) and Doctor of Philosophy (PhD).

Please visit our website (www.grad.jfn.ac.lk) for more details.

Contact the Faculty of Graduate Studies (T.P. No. : 021 222 3608) in office hours for further clarifications.

Registrar
31.07.2024

(ஏ.43020) (N-1)

## ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY

ஆங்கிலப் கற்கை நெறி – தொழில் புரிவோர் / உயர்தர கல்வியை நிறைவு செய்தோர்

1.க.பொ.த – உயர்தரம் கற்றோர் 2. க.பொ.த – சாதாரணதரம் கற்றோர்

### English classes for workers and A/L,O/L students

1. Spoken / பேச்சுத்திறன்
2. Written / எழுதும் திறன்
3. Reading / வாசிப்புத் திறன்
4. Listening / செவிமடுக்கும் திறன்
5. Preparing for IELTS
   - A) IELTS life skill
   - B) Acadamic
   - C) General

03.09.2024 – திங்கட்கிழமை
புதிய பிரிவுகள் ஆரம்பம்

Duration - 6 Months
Registration fee - 2000/-
Course fee - 30,000/-



பாட நெறியின் முடிவில் நடத்தப்படும் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் - மாலை 05.00pm-7.00pm (செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி)
மானிப்பாய் - காலை 09.00am-12.00 pm (திங்கள் புதன் மற்றும் வெள்ளி)
மானிப்பாய் - மாலை 05.00 pm-07.00 pm (திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன்)

**VACANCY**

Account Assistant

We are seeking for an energetic personality, who possess HNDA with three years experience.

*Email your Biodata - samrajasuriar40@gmail.com*

Further details : Angel International School, Mathers Lane, Manipay.

Angel International School, No 17, Rasavinthoddam, Jaffna.

021-225-5628/0773068997/0775435968/0777231371

## மரண அறிவித்தல்

மண்ணில்
15 . 02 . 1940



விண்ணில்
30 . 07 . 2024

### மாசிலாமணி கிருஸ்ணபிள்ளை

அச்சுவேலி தெற்கை பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட மாசிலாமணி கிருஸ்ணபிள்ளை அவர்கள் கடந்த 30.07.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் கிருஸ்ணப்பிள்ளையின் அன்புத் துணைவியாரும், சுமதி (ஓய்வுபெற்ற முகாமைத்துவ உத்தியோகத்தர், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்), முகுந்தன் (பிரான்ஸ்), வாசுகி (ஆசிரியை, யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நற்குணராஜா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), அனுசியா (பிரான்ஸ்), மனோரஞ்சிதன் (விரிவுரையாளர், யா/தேசிய கல்வியற் கல்லூரி-கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஐந்தூரியா (ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்), சாங்கவி (வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி) ராகுல், துளசிராம், மானுஷா, மானஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2024) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மாசிலகம், ஆவரங்கால்,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 420 8582

(CS 1047) A-1

## 17 ஆண்டுகள் உம் நினைவுகளுடன்



### சகாதேவன் நிலக்ஷன்

08.11.1985 - 01.08.2007

டடா அண்ணா அண்ணி
நிலாஷன்

செல்வ நிலாவகம்
250 இ(47)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவமடுவில் குழுமோதல்: நால்வர் மருத்துவமனையில்!


கிளிநொச்சி, ஓக. 1
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லைப்பகுதிகளான கண்ணகி நகர், புன்னைநீராவி, தர்மபுரம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட குழு மோதலில் நால்வர் படுகாயங்களுக்கு உள்ளாகி கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விசுவமடு 12ஆம் கட்டைப்பகுதியில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. 44, 26, 30, 19 ஆகிய வயதுடையவர்கள் காயமடைந்து தர்மபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். புதுக்குடியிருப்புப்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-19)


## மரண அறிவித்தல்

### வல்லி நாகநாதி



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் டேவிட் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி நாகநாதி 31.07.2024 (புதன் கிழமை) நேற்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற வல்லி-சத்தியாபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆசீர்வாதம்- அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கமலரின் கணவனும், ரொபின் கென்ஸ்மன் காலஞ்சென்ற தெய்வம், தங்கம், அனிஸ்ரன், கொன்சி சிறிறெக்சன் ஆகியோரின் அன்பு தந்தையும் மாலினி நோனி,அனுசா, குமார், அன்ரனி ஜோசப் ஆகியோரின் மாமனாரும் தினேஷ், திலீப், டமிஸ்கா, கபில், அபி, அபிசா, மெசியா, சாம் றொஸ்மி, றோஜன், றொஜினி சுமன், ரூபி, குவேனி, சரண், அஸ்வின், அனற் ஆகியோரின் பேரனும், பிரிதிக், கவி, மதி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.
அன்னார்ரின் நல்லடக்கம் திருப்பலி இன்று 01.08.2024 வியாழக்கிழமை பி.ப. 02.15 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் நடைபெற்று பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: குடும்பத்தினர்
077 935 2560

(CS 1046) V-1

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 12 . 1985



மறைவு
30 . 07 . 2024

### கணேசலிங்கம் கோபிநாத்

யாழ்ப்பாணம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி பத்திர காளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் கோபிநாத் கடந்த 30.07.2024 செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலர் வீதி, திருநல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.
076 6053 681

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மலர்வு
05 . 05 . 1980



உதிர்வு
31 . 07 . 2024

### ஆசீர்வாதம் தனஞ்செயன்

(Faculty of Science, Department of Botony University of Jaffna.)

கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், நவிண்டில் கரணவாய் மத்தி கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் தனஞ்செயன் நேற்று (31.07.2024) புதன்கிழமை காலமானார்.
காலஞ்சென்ற ஆசீர்வாதம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், திருமதி தனஞ்செயன் வையந்தியின் அன்புக் கணவரும், தக்ஷணன், நக்ஷணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி அனுசுதன் கார்த்திகாவின் (Cinnamon Grand) அளப்பிரிய தம்பியும், திரு. ஆசீர்வாதம் சஞ்செயனின் (UK) தோழமைமிகு தமையனும், திரு.நாராயணப்பிள்ளை அனுசுதனின் மரியாதைமிகு மைத்துனரும்", திருமதி சஞ்சேயன் சரணியாவின் அருமையான அத்தானும், செல்வி மிதுஷாயனியின் தங்கமான தாய்மாமனும் (ஆசைமாமா), அபிநிஷா, அபிஷாம், அபிசெயன் ஆகியோரின் பாசமிகுந்த பெரியப்பாவும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், ராஜேஸ்வரி, செல்வி இரத்தினம், சிவயோகம், திரு.சிவசுப்பிரமணியம், இந்திரகுமாரியின் பிரியமான பெறா மகனும், திருமதி S.அபிராமியின் அன்பு உடன்பிறவாத தம்பியும், திருமதி S.மாதங்கி, திருமதி B.மேகலா, திரு.S.பிரசாத் ஆகியோரின் பாசமிகு உடன்பிறவாத அண்ணனும், ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2024) வியாழக்கிழமை அவரின் நவிண்டில், கரணவாய் மத்தி, கரவெட்டி) இல்லத்தில் பி.ப 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
27 . 11 . 1961



இறப்பு
31 . 07 . 2024

### விஜிதா குகதாசன்

(ஓய்வுநிலை ஆசிரியர்)

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும் தொல்புரம் மேற்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஜிதா குகதாசன் (ஓய்வுநிலை ஆசிரியர்) நேற்று (31.07.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குகதாசன் அவர்களின் பாசமிகு மனைவியும், ஶ்ரீதாமோதரராஜா (தெல்லிப்பளை), ஶ்ரீஸ்கந்தராஜா (அச்சுவேலி), ஶ்ரீகரன் (கனடா), ஶ்ரீறஞ்சன் (சுழிபுரம்), ஶ்ரீரவீந்திரா (மூளாய்), லலிதா (தொல்புரம்), சுபிதா (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், குகபிரசாத் (கனடா), குகப்பிரியா (கனடா), காலஞ்சென்ற பிரியந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜனித்தா (கனடா), சுரேஸ்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விதுஷி, விதுண், ஜனுஷ் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைள் இன்று (01.08.2024) வியாழக்கிழமை மதியம் 01.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

பிரசாத் (மகன்):0769401708
லலிதா (சகோதரி) : 077 138 8400

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 43022) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு நாடுகளை தாக்க ரஷ்ய ஏவுகணைகள் 'ரெடி'



## புடின் பகிரங்க எச்சரிக்கை

**மொஸ்கோ, ஓக. 1**

**மேற்குலக நாடுகளுக்கு அருகாக, நீண்டதூரம் சென்று தாக்கக்கூடியதும் அதி ஆபத்தானதுமான ஏவுகணைகளை ரஷ்யா நிறுத்தும் என்று அதிபர் புடின் எச்சரித்துள்ளார்.**

ஜேர்மனியில் நீண்டதூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை நிறுத்துவதற்கு அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது. இதையடுத்தே, அமெரிக்காவின் இந்த முயற்சி ரஷ்யாவை அச்சுறுத்தும் செயல் என்றும், இதற்குப் பதிலடியாக மேற்குலக நாடுகளுக்கு அருகாக ரஷ்யாவின் மிகச் சிறந்த ஏவுகணைகள் நிறுத்தப்படும் என்றும் புடின் எச்சரித்துள்ளார். ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் கூட்டணி அமைத்து என்ன மேற்கொண்டாலும், அதற்குப் பதிலடியாகத் தகுந்த நடவடிக்கைகளை ரஷ்யா எடுக்கும் என்றும் புடின் தெரிவித்தார்.

உக்ரைன் போரில் ரஷ்யப் படைகள் முன்னேற்றம் கண்டுள்ளன. இந்தப் போரில் மேற்கு நாடுகளின் தலையீடு ரஷ்யாவுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையிலோ அல்லது ரஷ்யாவால் ஏற்கக்கூடிய போரியல் நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்ட வகையிலோ அமைந்தால், ரஷ்யாவின் அணுக்கட்டமைப்பைப் பயன்படுத்தப் பின்னிற்கப்போவதில்லை என்ற முடிவில் மாற்றம் இல்லை என்றும் புடின் மேலும் எச்சரித்துள்ளார். (ம)

# இஸ்ரேலியச் சிறைகளில் பலஸ்தீனருக்கு கொடுமை

ஜெருசலேம், ஓக.1

இஸ்ரேலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலஸ்தீன கைதிகள் பாலியல் ரீதியாக துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இஸ்ரேல் நாட்டின் இராணுவ வீரர்கள் பலஸ்தீன ஹமாஸ் கைதிகளிடம் கண்ணியக் குறைவான முறையில் நடந்து கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குற்றச்சாட்டுகளை அடுத்து இதுவரை 9 இராணுவச் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு உள்நாட்டில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் யோவ் காலண்ட், வீரர்களிடம் விசாரணை மேற்கொள்ள எவ்விதத் தடையும் இருக்கக் கூடாது. சட்டம் அனைவருக்கும் சமமானது என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# வயநாட்டு நிலச்சரிவு உயிரிழப்பு அதிகரிப்பு

புதுடில்லி, ஓக.1

இந்தியாவின் கேரள மாநிலத்தில் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

தற்போது மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், 140க்கும் மேற்பட்டோரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ள நிலையில், 700 புலம்பெயர் தொழிலாளர்களின் நிலை தொடர்பாகக் கேள்வி எழுந்துள்ளது.

மண் சரிவு ஏற்பட்ட பகுதியில் ஹாரிசன்ஸ் மலையாளம் நிறுவனத்துக்குச் சொந்தமான தேயிலை, கோப்பித் தோட்டங்கள் உள்ளன. அவற்றில் மேற்கு வங்கம், அசாம் மாநிலங்களைச் சேர்ந்த 700 க்கும் மேற்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் பணியாற்றி வந்தநிலையில் அவர்கள் நிலச்சரிவில் சிக்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

மலைப்பகுதி முழுவதும் மேகமூட்டமாகக் காணப்படுவதால் மீட்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டு வருகின்றது. பகலில் மட்டுமே அங்கு மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (எ-இ)



# வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் மகள்!

பியாங்யாங், ஓக.1

தனது மகளை வடகொரியாவின் அடுத்த ஜனாதிபதியாக நியமிக்க கிம் ஜோங் உன் திட்ட மிட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

வடகொரியாவின் ஜனாதிபதி கிம் ஜோங் உன், 2011ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டார். அவர் அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் தொடர்ச்சியாக மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றார்.

இந்தநிலையில், கிம் ஜோங் உன் ஜனாதிபதி பொறுப்பிலிருந்துமெல்லமெல்லவிலகவுள்ளார் என்றும், தனது 12 வயது மகள் ஜூ ஏ என்பவரை நாட்டின் அடுத்த அதிபராக்கிட திட்டமிட்டு பயிற்சி அளித்து வருகிறார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)



# கமலா ஹரிஸுக்கு பெருகும் ஆதரவு!

வொஷிங்டன், ஓக.1

அமெரிக்க அதிபர் தேர்தலில், கமலா ஹரிஸுக்கு திடீரென ஆதரவு பெருகி வருகின்றது என்று தேர்தல் கள நிலைவரங்கள் மற்றும் கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்த பைடன் விலகியதையடுத்து, கமலா ஹரிஸ் வேட்பாளராகக் களமிறங்கவுள்ளார். பைடனே வேட்பாளர் என்றிருந்த காலத்தில், ட்ரம்புக்கு ஆதரவு காணப்பட்டாலும் தற்போது கமலா ஹரிஸ் ட்ரம்பைப் பின்தள்ளி பல்வேறு மாநிலங்களிலும் முன்னிலை வகித்து வருகின்றார் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி வேட்பாளராக பரப்புரையைத் தொடங்கிய ஒருவார காலத்தில் கமலா ஹரிஸ் தேர்தல் நிதியாக 200 மில்லியன் டொலரைத் திரட்டியுள்ளார். இந்த நிதியை வழங்கியவர்களில் 66 வீதமானவர்கள் தற்போதுதான் முதல்முறையாக தேர்தல் நன்கொடை வழங்குபவர்களாகக் காணப்படுகின்றனர் என்று அமெரிக்கத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)

## ஹமாஸ் தலைவர் கொலை

# போரை நோக்கி மத்திய கிழக்கு

லண்டன், ஓக.1

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டுள்ளமை மத்திய கிழக்கை முழுமையான ஒரு போரை நோக்கி நகர்த்தியுள்ளது என ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தின் மத்திய கிழக்கு விவகா ரங்களுக்கான பேராசிரியர் நடெர் ஹசேமி தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் தலைவரின் படுகொலை முன்னர் ஒருபோதும் இல்லாத அளவுக்கு மத்திய கிழக்கை முழுமையான போரை நோக்கி நகர்த்தியுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது பெரும் திருப்புமுனை எனத் தெரிவித்துள்ள அவர், ஹமாஸ் தலைவரின் படுகொலை லெபனானிலும் எதிரொலிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

ஹனியேயின் படுகொலைக்குப் பின்னர் இந்த மோதலைத் தீவிரப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈரான் ஈடுபடலாம் என்றும் அவர் அஞ்சம் வெளியிட்டுள்ளார். (எ-இ)



# வெள்ளத்தில் தத்தளிக்கும் சீனா

பீஜிங், ஓக.1

சீனாவின், மத்திய பகுதியான ஹுனான் மாகாணத்தில் பெய்து வரும் கன மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 7 பேர் உயிரிழந்துள்ளனர், மூவர் காணாமற்போயுள்ளனர்.

காணாமற்போனவர்களை மீட்கும் பணி தொடர்ந்து வருகின்ற நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக 5 ஆயிரத்து 400 மீட்புக் குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சீனாவின் பல பகுதிகளில் வெப்ப அலை வீசி வந்தாலும், சில பகுதிகளில் கன மழை தொடர்ந்து வருகின்றது. கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் சீனாவில் சில பகுதிகளில் 645 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 15 பேர் உயிரிழந்திருந்தனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடலமாக...

நிலையில் அவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.
ஆனந்தராசா சஜீவன் (வயது-27) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.
உயிரிழந்த இளைஞர் கனடாவுக்குச் செல்வதற்குத் தயாராக இருந்த நிலையில், அவர் நேற்றுமுன்தினம் இரவு 20 இலட்சம் ரூபா பணத்தை பாண்டியன் குளத்துக்குக் கொண்டுசென்றுள்ளார். இரவு 8.40 மணிக்குப் பின்னர் அவருடைய திறன்பேசி செயலிழந்துள்ளது. இதையடுத்து அவருடைய நண்பர்கள் தேடுதலில் ஈடுபட்டபோது, வவுனிக் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.
அவரது இறப்புக் கொலையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்ட நிலையில், அவருடைய கழுத்து நெரிக்கப்பட்ட தடயங்கள் காணப்படுவதாகவும், அவர் கொல்லப்பட்ட பின்னரே குளத்துக்குள் வீசப்பட்டுள்ளார் என்றும் உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.
(அ-ம-26)

## ஹமாஸின்...

பலஸ்தீன அகதி முகாமில் பிறந்த ஹனியே, 1980ஆம் ஆண்டுகளில் அதாவது பதின்ம வயதுச் சிறுவனாக இருந்த காலப்பகுதிகளிலேயே ஹமாஸின் மிகச்சிறந்த இராஜதந்திரியாக உருவெடுத்தார். இஸ்ரேலுக்கு எதிரான இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக 1985ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அவர் மூன்று தடவைகள் இஸ்ரேலிய சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்தார். சிறை மீண்டதும் ஹமாஸைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.
ஹமாஸ் அமைப்பு பயங்கரவாத அமைப்பாக இஸ்ரேலாலும் உலக நாடுகளாலும் தற்போது அறியப்பட்டாலும், அதற்கும் ஓர் அரசியல் முகம் இருந்தது. 2003ஆம் ஆண்டு பலஸ்தீனத்தில் இடம்பெற்ற தேர்தலில் ஹமாஸுக்கு மக்கள் வழங்கிய பேராதரவையடுத்து, பலஸ்தீனத்தின் பத்தாவது பிரதமராக ஹனியே பொறுப்பேற்றுக் கொண்டார். அன்றுமுதல் 'ஹமாஸின் ஜனநாயக முகம்' என்று அவர் அழைக்கப்பட்டார்.
2001ஆம் ஆண்டு ஹமாஸின் பெருந்தலைவர்களில் ஒருவராக ஹனியே மாற்றம் பெற்றதையடுத்து, அவரைக் கொல்வதற்கு இஸ்ரேல் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. சுமார் 15 தடவைகளுக்கும் அதிகமாக இஸ்ரேலின் மொசாட் உளவுப் பிரிவு ஹனியேவை இலக்குவைத்தது என்கின்றது ஹமாஸின் தகவல்.
இஸ்ரேலின் அதீதமான ஆக்கிரமிப்பையடுத்து (மேற்குக்கரை, காஸா) 2015ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கு எதிராக அரசியல் கொள்கையை தீவிரமான இராணுவக் கொள்கையாக ஹனியே மாற்றிக்கொண்டார். இதன்பின்னர் அவர் கட்டாருக்குச் சென்று அங்கு இரகசியமாக வாழ்ந்து வந்தார். கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேலுக்கு எதிரான ஹமாஸின் தாக்குதல்களைத் திட்டமிட்ட வெகுசில தலைவர்களில் ஹனியேவும் ஒருவர் என்பதே இஸ்ரேலின் குற்றச்சாட்டாக அமைந்துள்ளது.
கடந்த 10 மாதங்களாக காஸாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கு எதிராக் ஹனியே மிகத் தீவிரமாகச் செயற்பட்டார். இஸ்ரேலுக்கு எதிரான வெளிநாட்டுச் சக்திகளை ஒருங்கிணைக்கும் வகையில் அவர் செயற்பட்டார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, ஈரானின் தலைநகர் தெக்ரோனில் அவர் தங்கியிருந்த கட்டடத்தில் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் ஹனியே கொல்லப்பட்டுள்ளார்.
(அ-ம)

## இணக்க...

பெற்ற நிலையில், இந்த வழக்கை இணக்கசபைக்கு மாற்ற முடியுமா? என்று மருத்துவர் அர்ச்சுனா தரப்பினர் கோரிக்கையை முன்வைத்தனர். இதற்கு எதிர்த்தரப்பு சட்டத்தரணிகள் கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.
அச்சுறுத்தியமை, பேசித்தொந்தரவு செய்தமை, கடமைக்கு இடையூறு விளைவித்தமை, சுகாதாரத் துறை மீதான அவதூறு, மருத்துவத்துறை மீது கோபம் கொள்ளச் செய்யும் விதமாக மக்களுக்கு துவேசம் ஏற்றியமை உள்ளிட்ட காரணங்களுக்காக மருத்துவர் அர்ச்சுனா மீது ஏனைய மருத்துவர்களால் தொடரப்பட்ட ஐந்து வழக்குகள், சாவகச்சேரி நீதிமன்றில் நீதிபதி அ.யூட்சன் தலைமையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.
மருத்துவர்கள் கடமை நேரத்தில் வெளியில் செல்வதைத் தடுக்கும் முகமாகவே மருத்துவர் அர்ச்சுனா செயற்பட்டார் என்றும் மருத்துவர்கள் கடமை நேரத்தில் தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றிவிட்டு மேலதிகக் கடமை என்ற பெயரில் மக்களின் வரிப்பணத்தைக் கொள்ளையிடுவதையும்தான் மருத்துவர் அர்ச்சுனா வெளிக்கொணர்ந்திருந்தார் எனவும் அர்ச்சுனாவின் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்திருந்தார். அத்துடன், இரு தரப்பினரும் மருத்துவத்துறையைச் சார்ந்தவர்கள் என்பதால், வழக்கினை இணக்க சபைக்கு மாற்றுமாறும் அவர் மன்றில் சமர்ப்பணத்தை முன்வைத்தார்.
அதற்கு முறைப்பாட்டாளர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்ததுடன் மருத்துவர் அர்ச்சுனா பொலிஸ் நிலையம் சென்று தான் குற்றம்சாட்டிய நபர்கள் தொடர்பான ஆதாரங்களை இதுவரை வழங்காமை தொடர்பாகவும் மன்றில் சுட்டிக்காட்டினர். அத்துடன் எதிர்த்தரப்பினர் நீதிமன்றத்துக்குத் தவறான தகவல்களை வழங்கி வழக்கைத் திசைதிருப்ப முயல்கின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிமன்றம், செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு வழக்கைத் தவணையிட்டது. அத்துடன் மருத்துவமனை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டது.
அதேநேரம் மருத்துவர் அர்ச்சுனா சாவகச்சேரி மருத்துவமனையில் வைத்து தனது திறன்பேசி மற்றும் பணத்தைப் பறித்தமைக்காக மருத்துவர்களுக்கு எதிராகத் தொடுத்த வழக்கும் குறித்த தினத்தில் விசாரணைக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (அ-ம-26-66-20)

## ரணிலுக்கு...

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான அணியினரே ஜனாதிபதி ரணிலை ஆதரிப்பது என்று தீர்மானித்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்காக சுதந்திரக் கட்சியின் நிமால் அணியினரால் மத்தியகுழுக் கூட்டம் நேற்றுக் கூட்டப்பட்டிருந்தது. இதன்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.
மேற்படி மத்திய குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர், சுதந்திரக் கட்சியின் நிமால் அணியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். கட்சியின் கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தையும் கையளித்தனர்.
அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்குத் தமது தரப்பு முழு ஆதரவையும் வழங்கும் என சுதந்திரக் கட்சியின் நிமால் அணியினர் உறுதியளித்துள்ளனர்.
எனினும், சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தலைமையிலான அணியினர், எதிர்வரும் சனிக்கிழமையே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முடிவெடுக்கவுள்ளனர். தயாசிறி அணி, சஜித் பிரேமதாஸவையே ஆதரிக்கும் எனத் தெரியவருகின்றது. சுதந்திரக் கட்சியின் மைத்திரி அணி, விஜயதாஸ ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
(அ-ம-44-26)

## எரிவாயு...

படும் எனவும் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.
இதற்கமைய 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு 3 ஆயிரத்து 690 ரூபாவுக்கும், 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு ஆயிரத்து 482 ரூபாவுக்கும், 2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு 694 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## யாழ். பல்கலைக்...

பதற்கு முற்பட்ட நிலையில் காப்பாற்றப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார்.
இந்த நிலையில், நேற்றையதினம் சிகிச்சையின்போது அவர் உயிரிழந்துள்ளார். பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-100)

## இளைஞன்...

பணிப்பின் பிரகாரம் தென்மராட்சிப் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி இ.நிசாந்தன் விசாரணையை மேற்கொண்டார். சாவகச்சேரி ஆதார மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஒ-159-9)

## மேன்முறையீடு...

மேன்முறையீட்டு மனுக்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ப்ரீத்தி பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட, ஏ.எச்.எம்.டி.நவாஸ், ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய 5 பேர் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டது. இதன்போது வழக்குடன் தொடர்புடைய பிரதிவாதிகளில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகச் சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.
இந்த வழக்குத் தொடர்பான மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாகப் பிரதிவாதிகள் எட்டு வருடங்களுக்கும் மேலாக சிறைச்சாலையில் உள்ளதாக பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதி நீதிமன்றத்தில் தெரிவித்தார். இதன்போது வழக்குத் தொடர்பான மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுப்பதாக சொலிசிட்டர் ஜெனரல் அயேஷா ஜினசேன நீதிமன்றத்தில் தெரிவித்தார்.
பிரதிவாதிகள் கொலை, சதி மற்றும் சட்ட விரோதக் குடியேற்றம் ஆகிய குற்றங்களில் குற்றவாளிகளாக உள்ளதாக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.
முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களைப் பரிசீலித்த ஐந்து பேர் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு வழக்குத் தொடர்பான மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களை மேன்முறையீட்டுப் பிரதிவாதிகளுக்கு உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சொலிசிட்டர் ஜெனரலுக்கு அறிவித்தது. இதன்பின்னர் இந்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையை ஜனவரி 20ஆம் திகதி முன்னெடுக்க நீதிமன்றம் திகதி நிர்ணயித்தது.
(அ-ஒ-66)

## இறந்தவரின்...

நிலையில், அவருடைய மனைவியும் பிறிதொருவரும் வல்வெட்டித்துறை பொலிஸாரால் பிரதான சந்தேகநபர்களாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:என-
கோழிகளை மொத்தமாக வாங்கி விற்பனை செய்து வந்த குறித்த குடும்பத் தலைவரின் வீட்டுக்கு வழமைபோல, ஜூன் மாதம் முதலாம் திகதி அதிகாலை 3 மணியளவில் வாகனமொன்றில் கோழிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவற்றை இறக்கிய பின்னர் வாகனம் சென்றுவிட்டதால், வீட்டுக்கதவை பூட்டிவிட்டு குடும்பத்தலைவர் வீட்டினுள் சென்றுள்ளார்.
இதன்போது வெளியே ஏதோ அசாதாரணமான சத்தம் கேட்டதையடுத்து, அந்தக் குடும்பத்தலைவர் வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தபோதே அவர்மீது சரமாரியான வாள்வெட்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. அவர் கூக்குரல் எழுப்பிய சத்தம்கேட்டு குடும்பத்தலைவரின் மனைவி வெளியில் வந்து பார்த்தபோது, அவரிடமிருந்த தங்கச் சங்கிலியைத் தருமாறும் இல்லையேல் அசிட் வீச்சுத் தாக்குதலை நடத்துவோம் என்று மிரட்டி மூன்றரைப் பவுண் சங்கிலி கொள்ளையிடப்பட்டதாக பொலிஸில் முறையிடப்பட்டிருந்தது. இதையடுத்து, அந்தக் கொள்ளையர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. உயிருக்கு ஆபத்தான நிலையில், சிகிச்சை பெற்றுவந்த அந்த நபர், சிகிச்சையின் போது அண்மையில் உயிரிழந்தார். இதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையிலேயே, இறந்தவரின் மனைவியும், பிறிதொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
உண்மையில் நகைகள் கொள்ளையிடப்படவில்லை என்றும், நகையைக் கொள்ளையிடுவதற்காக இந்தக் கொலை நிகழ்த்தப்பட்டதைப் போன்று காண்பிப்பதற்காக பிரதான சந்தேகநபர்கள் முயன்றுள்ளனர் என்பதும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
(அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கண்டாவளையிலுள்ள

# சமுர்த்தி வங்கியில் பெருந்தொகை மோசடி

## விசாரணைக்காக நான்கு குழுக்கள்

**கொழும்பு, ஓக. 1**

**கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி வங்கியில் பல இலட்சம் ரூபா மோசடி இடம்பெற்றுள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் கணக்காய்வுக்காக 4 குழுக்கள் களமிறக்கப்பட்டு விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.**

கண்டாவளை பிரதேச செயலரால் கண்டாவளை சமுர்த்தி வங்கிக் கிளையில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலையில், உடன் நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த சமுர்த்திக் கிளையின் அனைத்து செயற்பாடுகளும் முடக்கப்பட்டு பிரதேச செயலரால் வங்கிக் கிளை பொறுப்பெடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கண்டாவளை பிரதேச செயலரிடம் வினவிய போது அவர் தெரிவித்ததாவது:-

குறித்த வங்கிக் கிளையில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட சோதனையில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. குறித்த விடயம் தொடர்பில் கணக்காய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பயனாளிகளின் கையொப்பமின்றி வங்கிக் கணக்கிலிருந்து பணம் மீளப்பெற்றுக்கொண்டமை, கையொப்பங்கள், கைநாட்டுகளை முறைகேடாகப் பயன்படுத்தி நிதி மோசடி செய்தமை, பயனாளிகளின் அனுமதி மற்றும் சம்மதமின்றி வங்கிக் கடன்களை பெற்றுள்ளமை உள்ளிட்ட மோசடிகள் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது - என்றார். (அ-ச-113)

### பால்மா விலை குறையும்?

கொழும்பு, ஓக.1

பால்மாவின் விலையைக் குறைப்பது தொடர்பாகப் பால்மா இறக்குமதியாளர்களுடன் அடுத்த சில தினங்களில் கலந்துரையாடல் நடத்தப்படுமெனவும், நுகர்வோருக்குத் தேவையான சலுகைகளை வழங்கும் வகையில் இந்தக் கலந்துரையாடல் அமையுமெனவும் வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ம-66)

**வங்கி மீதி வசதி**
**(SHOW MONEY)**
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
**074 173 7684**
(CS5588) J-1

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் மடம் வீதியில் 1 3/4 பரப்பு 3 குளி காணி, பழைய வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
077 843 3854, 0049 1590 1355 410, 0049 230 592 2663
(cs.55820) (N-1)

**காணி விற்பனைக்கு**
கைதடி - நவபுரம் வீதி முகப்புடன் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ஆவணங்கள் அனைத்தும் சட்டரீதியாக 100% சரியாக உள்ளன.
- நன்னீர் வசதி உண்டு.
- சிறந்த சுற்றுச் சூழல்.
- 1 பரப்பு - 8 லட்சம் ரூபா.

விலை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்
மேலதிக விபரங்களுக்கு :-
**076 659 0583, 077 612 2971**
(CS/55818) J-1

**காணி விற்பனைக்கு**
- கொழும்புத்துறை விதானையார் வீதியில்
- 2 1/2 பரப்புக் காணி 4 பக்கமும் சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு.
- 1 1/4 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும்
- சிறந்த சுற்றுச் சூழல்
- நல்ல நீர் ஊற்று
- A9 வீதி 7 நிமிடம்
- கச்சேரி 10 நிமிடம்
- சுண்டுக்குழி, சென் ஜோன்ஸ் பாடசாலைகள் 7 நிமிடம்

தரகர் தேவையில்லை.
காணி உரிமையாளர்
**076 659 0583**

- யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதான வீதியில் காப்பற் வீதி முகப்பு 200 அடியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- எந்தவொரு வியாபார நோக்கத்திற்கும் சிறந்த காணி.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.


காணி உரிமையாளர்
**076 659 0583, 070 575 8086**

**காணி விற்பனைக்கு**
**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணியில் 24 பரப்பு காணி மட்டுமே விற்பனைக்கு உண்டு.**
**நிலப்பரப்பு**
- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் (2 வது காணி).
- 20 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5 1/2 இலட்சம் (550000/=)
- தரகர் தேவையில்லை

**பார்வையிடும் நேரம்:**
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.
தொடர்புகளுக்கு:
ஜெயம் { 077 814 7389, 077 986 5457
(CS 1043) V-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 07 . 1947



இறப்பு 31 . 07 . 2024

### திருமதி சோதிநாதன் கனகம்மா

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிநாதன் கனகம்மா நேற்று (31.07.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா சோதிநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், கமலாதேவி மற்றும் சிவசுப்பிரமணியம், புஸ்பலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, தியாகராசா, சத்தியமூர்த்தி, சாம்பசிவமூர்த்தி மற்றும் கனகநாயகம் காலஞ்சென்ற கோமளாதேவி மற்றும் தயாபரசிவம், காலஞ்சென்ற அன்னரத்தினம் மற்றும் திலகவதி, வைகுந்தவாசன், வள்ளுவதாசன், வாசுதேவலிங்கம், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணமூர்த்தி, ஈஸ்வரிதேவி மற்றும் அருட்செல்வம் ஆகியோரின் பாசமிகு பாசமிகு மைத்துனியும், பிரதீபன் (இ.போ.ச. சிரேஷ்ட சாலை பரிசோதகர்), அகிலன் (லண்டன்), சகாயநிதி ஆகியோரின் அன்புத் தாயும், நாமகள், ஜெயதனுஜா (லண்டன்), கமலதாஸ் (சிறைச்சாலை உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு மாமியும், கேதாரணி, பிரியந்தி, கபிலாஷ், ஓவியா, சுஜானிகா, பாரதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மகன் - பிரதீபன் :0777 111 519
மருமகன் - கமலததாஸ் :077 8329 455

தகவல்:
குடும்பத்தினர்.
(CS 1047) A-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.